(எ) புதுக்கோட்டை அருகே மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதால் தொழிலாளி மரணம் குறித்து

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நான் இரண்டு வாரங்களுக்கு முன்பாக புதுக்கோட்டை நகரத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதன் பயனாக ஒரு தொழிலாளி மரணம் அடைந்தது குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். மரணமடைந்த அந்த நபரின் குடும்பம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. யாரும் காப்பாற்ற முடியாத நிலை இருக்கிறது. எனவே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவரது குடும்பத்திற்கு நிதி ஒதுக்க தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அனுமதிக்கப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ கடிதம் வந்துள்ளதா? நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அதை இங்கே எழுப்பக் கூடாது. இன்னும் பதில் வராமல் இருப்பதைப்பற்றித் தான் எழுப்ப வேண்டுமே தவிர நிராகரிக்கப்பட்ட விஷயத்தை இங்கே சொல்லக் கூடாது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்ததைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் மழையினாலும், வெள்ளத்தினாலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு விடுங்கள்.

(ஏ) டி. வி. எஸ். நிறுவனத்தின் தொழிலாளர் உண்ணாவிரதம் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கடந்த ஐந்து நாட்களாக டி.வி.எஸ். நிறுவனத்தின் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்க முயற்சி செய்து கைது செய்யப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு இன்றைக்குச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை இப்பொழுது வாபஸ் வாங்குவதற்குத் தயாராக இருக்குமா என்பதோடு, ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட அடிப்படையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ கையில் இல்லாமல் எழுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

1978 ஏப்ரல் 7]

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி. வி. எஸ். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டையின் முன்னால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நிராகரிக்கப்பட்டு அனுப்பியாகிவிட்டது. அதை எழுப்பக் கூடாது, உட்காருங்கள்.

(ஐ) வியாசர்பாடி, கக்கன்ஜி நகர், கருணாநிதி நகர் போன்ற பகுதிகளில் பல குடிசைகள் அகற்றம் குறித்து.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். எனது தொகுதியிலுள்ள பெரம்பூர் பகுதி உள்ளடங்கிய வியாசர் பாடி குடிசைப் பகுதி களான வீட்டு வசதி வாரியத்தின் மேம்பாட்டிலுள்ள கக்கன்ஜி நகர், ஏ மற்றும் பி பிளாக், கலைஞர் கருணாநிதி நகர், சத்தியவாணிமுத்து நகர், பெரியார் நகர், காமராஜர் நகர், பக்தவச்சலம் நகர், சாஸ்திரி நகர் ஆகிய சுமார் 10,000 குடிசைகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு எம்.எம்.டி. ஸ்தாபனம் மூலம் பல வசதிகளைச் செய்யப்போவதாகவும், அதனால் பல குடிசைகளை அகற்ற வேண்டி வரும் என்றும் தற்போது அவர்கள் அனுபவித்து வரும் நில அளவை குறைக்க வேண்டுமென அந்த மக்களை அணுகி இசைவு தர வற்புறுத்துகிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலுள்ள குடிசைவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை.

(பதில் இல்லை.)

இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை ஏற்றுமதி செய்யும்போது ஏற்படும் தொல்லை குறித்தும், முகவை மாவட்டத்தில் நூலக ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் குறித்தும், தொண்டி காவல் நிலையத்தில் இரு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, நான் இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை துறைமுகத்தில் ஏற்றுமதி செய்கின்ற சூழ்நிலையில் பல தொந்தரவுகளுக்கு அந்தப் பகுதி உள்ளாகியிருக்கிறது என்று கொடுத்திருந்தேன், அதற்கு இதுவரையில் எந்விதமான பதிலும் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS